215

25

நசரேசர்

பிள்ளைத் தமிழ்.

சென்னை,

ச. வேதமாணிக்கம் அவர்கள்

இயற்றியது.

0-,15 ጠ.ሃጠ,N
N19
59951

லை, அணா **8**.]

1919.

15

சர்வேஸ்வராய நம:

நசரேசர் பிள்ளைத் தமிழ்.

சென்னை,

ச. வேதமாணிக்கம் அவர்களால்

இயற்றப்பெற்றது.

சென்னை:

அமெரிக்கன் டைமெண்ட் அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

1919.

[விலை அணா 6.]

வேண்பா.

சித்தமருள் ஞானச் சிலுவையடை யாளத்தாற்
சத்துருவை நீக்கித் தயைபுரிய—நித்யவொளி
யேந்தும் பிதாசுதனோ டிஸ்ப்ரீத்து சாந்துவெனத்
தேர்ந்தவரைச் சிந்தனைசெய் தேன்.

முகவுரை.

தமிழுயிலிற் சிறந்த இலக்கணிகள் குறிப்பாகத் தொகுத்துள்ளபிரபந்தம் தொண்ணூற்றாறு. இவற்றுள் பிள்ளைத் தமிழ் அல்லது பிள்ளைக் கவி என்பதும் ஒன்று. இப்பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண் பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைத்து. இது விசேஷம் அரசர், தேவர்களைப் புகழ்ந்தே பாடப்படுவதாகும். ஆண்பாற் பிள்ளைத் தமிழோவெனின்; பாட்டுடைத் தலைவனது சிறு குழந்தைப் பருவத்தைப்பற்றிக் காப்பு முதல் சிறுதே ரீறாகிய பத்துப் பருவங்களும் முறையே பொருந்தும்படி ஒவ்வொன்றிற்கும் பத்துச் செய்யுள் வீதம் ஆசிரிய விருத்தத்தாலாயினும், வகுப்பாலாயினும் சிறப்பித்துப் பாடுவது. இதின் பத்துப் பருவங்களாவன; காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை முழக்கல், சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல் என்பனவாம். இதற்குச் சூத்திரம்;

"கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே."

(இலக்கண விளக்கம்.)

இனி பெண்பாற் பிள்ளைக் கவிக் கிலக்கணமறிய வேண்டுழி இலக்கண விளக்க முதலிய நூல்களா லறிக.

இந்நூல் யாரைப் பற்றியதோ வெனின்:—பிதா, சுதன் இஸ்பிரீத்து சாந்து என்னுந் திரித்துவத்தி னடுவே விளங்கும் சுதனுகிய சர்வேஸ்வரனின் பிள் ளைப் பருவத்தை மேற்கூறிய இலக்கண வரம்பிற் குட் பட்டியற்றி யுள்ளமையின் இது ஆண்பாற் பிள்ளைக் கவியி னுறுப்பேற் றமைந்த நசரேசர் பிள்ளைத் தமிழ் எனும் பெயர்த்து. ஆகவே தமிழில் நசரமா நகர் அல் லது நசரையம்பதி என்னும் பெயரினையுடைய தலத் தின்கண் (தெய்வீக மனுஷீக பரத்துவத்துடன்) அவ தரித்த தேவாதிதேவ இராசாதிராச (யேசு) மனுக்கட வுள்மீது இயற்றப்பட்டதோர் பிரபந்தமென்க. நசரமா நகர் * ஈசர்=இதில் மா என்னும் பொதுச் சிறப்பு மொழி நீங்க, நசர×ஈசர்=நசரேசர் என்றும், அல்லது நசரை ஈசர் இதில் ஐகாரம்கெட நசர×ஈசர்=நசரேசர் என்றும் ஆக இவ்விருவகையானும் குணசந்தி பெற் றுப் புணர்ந்ததெனினும் ஒக்கும். அளகை×ஈசன்= அளகேசன், மதுரை × ஈசன் = மதுரேசன் என்பன போல.

இந்நூலியற்றுவதற்குக் காரணமோ வெனின்; தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் விசேஷமாக அந் நிய மதஸ்தர்களாலேயே அவ்வவர்கள் மரபுக் கடவுள் களின்மீது இயற்றியுள்ளனவே யன்றி நமது கத்தோ லிக்கு மதாசாரத்துக்கு ஒத்தவண்ணமாகவும், நமது மரபினர் ஒழிந்த நேரங்களில் பாடல் ரூபமாகப்பாடி தேவத்யானஞ் செய்து மனங்களிக்க வெண்ணில்

* ஈசன்=கடவுள், அரசன்.

அதற்குரிய பல்வேறு இசைகளால் ஆக்கப்பட்ட நூல்கள் கிடைப்பது அருமையினு மருமையாக விருப்பதால் அதை யொருவாறு தணிக்கும் வண்ணமாகவுமாம். ஆனால் புலவர் முதல் சிறு கல்வியாளரும் உணர்ந்து கொள்ளுமாறு பெரும்பாலுங் கடின பதங்களைத் தவிர்த்து எளிதில் அர்த்தம் விளங்கக்கூடிய சொற்களாலேயே இந்நூற்கண் செய்யுட்க ளமைக்கப்பட்டிருக்கின்றன.

அன்றியும் "சேசுநாதர் பிள்ளைத் தமிழ்" தேவமாதா பிள்ளைத்தமிழ் முதலிய நூற்கள் இருந்ததாகவும்இருப்பதாகவும் பலர்கூறுவாராயினும் நான்விசாரித்தஅளவில் அவை எவ்விடத்தில் என்ன விலைக்கு கிடைக்கின்றன என்பது குறிப்பதற் கின்மையின் இந்நூற்கு அவைகளை மூந்நூற்களாக்கொள்ள ஏதுவின்றி;பிள்ளைத் தமிழ்க்குரிய பொது இலக்கண வரம்பைமாத்திர மேற்கொண்டு நமது கத்தோலிக்கு மத பிரார்த்தனை, செபம், சரித்திரம், மகிமை அற்புத முதலியவைகளையே பெரும்பாலும் அமைத்துப் பாடவேண்டியதாயிற்று. ஆகவே அப்பிள்ளைத் தமிழ்களுக்கும், இப்பிள்ளைத் தமிழுக்கும் எவ்வளவு பொருத்தமும் வித்தியாசமும் அல்லது சமமுஞ் சிறப்பும் ஏற்பட்டிருப்பினும் யாவும் அந்த சர்வேஸ்வரனைச் சார்ந்ததேயென எண்ணும் அறிவுள்ளார் என்னையும் அரவணைப்பர் என்னும் பெருநோக்கத்துடனும், ஒரு தெய்வத்தின்மீது ஒரே விதமான பிரபந்தம் பலபேரால் பாடப்பட்டிருப்பது சகசமாயிருத்தல் காண்கிறோமாதலால் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்

தம் நமது யேசுநாதர்மீது முன்னே ஒருவரால் இயற்றப்பட்டிருக்க நானும் ஓர் பிள்ளைத் தமிழ் அவர்மீதே இயற்றுவது இழுக்காகாது என்ற உத்தேசத்துடனும் இந்நூலை இயற்றத் துணிந்தனன். அன்றியும்என தன்பிற்குரிய சிலநண்பர்களின் வேண்டுகோளும் இதற்கோர் தூண்டுகோலாயினது.

இப்பிரபந்தத்திற் காணப்படும் இலக்கண இலக்கிய சரித்திர அற்புத முதலியவைகளில் ஏதாவது தவறு ஏற்பட்டிருக்கிறதாகக் காணும் பெரியோரேனுஞ் சிறியோரேனும் என்மீது அன்பு பாராட்டி அதனை எனக்கு விளக்கிக் காட்டுவது பேருபகாரமாகவும், அவர்களுக்குப் புண்ணியமாகவு மிருக்குமென்று விநயமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமை வகித்துள்ளேன். ஆனல் அன்னோர் தமது வாய்ச்சாலகத்தால் எனக்குள்ள சிறு ஆராய்ச்சியையுங் கெடுக்க எண்ணி அங்ஙனந் துணியாதிருக்க சர்வேஸ்வரனின் சர்வ சக்தி முன்னிற்குமாக.

இங்ஙனம்,

ச—வே.

முதலாவது

காப்புப் பருவம்.

அஃதாவது பாட்டுடைத் தலைவனாகிய குழவியைத் தேவர் சொலையகற்றிக் காக்கவெனத் *தாயர் கூறுங் கூற்றாகப்பாடும் பகுதியதென்க. இது மூன்றாந் திங்களிற் கூறப்படுவது. இரண்டாமாத மென்பாரு முளர்.

---

*தாயார்-பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய் முலைத்தாய், கைத்தாய் செவிலித்தாய் என ஐவர்.

காப்புப் பருவம்.

திருச் சிலுவை.

ஆசிரிய விருத்தம்.

வான்செய் நவத்தாற் றிருத்துவத்தின்
  வளஞ்செய் தமர்ந்த வெழிற்சுதனைக்
கூன்செய் மதியை மிதித்தகன்னி
  குலஞ்செய் தவத்தா லெழுமாசை
நான்செய் யனந்த பவந்தீர்த்து
  நலஞ்செய் யேசு பெருமானைத்
தான்செய் சுமக்குந் தனிச்சிலுவை
  தகைசெய் தளிக்குஞ் சமயமிதே. (1)

செபமாலை.

சந்த விருத்தம்.

பனிநின்ற வுயர்தாம ரைக்கும்பி றைக்கும்
  பதநின்று குளிர்தந்த மைக்குந்த கைத்தாள்
கனிநின்ற வொருதெய்வ கனிதந்த சுதனுங்
  கதியென்ற வர்க்கேயு தவிசெய்க ரத்தான்
தொனிநின்ற புகழ்தத்து வச்சீர மைத்தே
  துகள்தீர்க்கு நசரேச மகவைப்பு ரக்குந்
தனிநின்று வேண்டுந்த யாசில ரெல்லாந்
  தபமாலை யாக்கொண்ட செபமாலை மன்றே. (2)

உத்ரீயம்.

வேறு சந்த விருத்தம்.

மன்னவ ருந்தொழு தேத்துஞ்சர் வேசனை
மாதவன் சூசைம கிழுந்த யாபனைத்
தன்னிக ரேதுந்த விர்த்தவி லாசனைத்
தாவிதன் கோத்திரந் தாங்குநன் னேசனை
யென்னரும் வேண்டற்கி சைந்தரு ளுதனை
யேசுவெ னும்நச ரேசப்ர தாபனை
கன்னிமை யாள்தருங் கர்த்தனை யன்புறுங்
காட்சியி னிற்றினங் காக்குமுத் ரீயமே.

பராபரன்.

ஆசிரிய விருத்தம்.

நன்னீர் வகுத்துப் புவியமைத்து
நவிற்றுங் கதிரோன் சுடர்விளக்க
நறும்பூங் காவி லாதனெடு
நளினப் பெருஞ்சி ரேவையெனும்
பொன்னீர் மையினுள் தனைமனையாய்ப்
பொருத்திப் புனிதத் திருவருளால்
புகழ்சே ரொருகட் டளையீந்தும்
புரையா லவர்க ளிழந்ததனுல்
என்னீர் மையினுஞ் சிறந்தநல
மெல்லா மளிக்கக் கருணையொடு

மிசைந்தே சுதனைப் பலிகொளுமெம்
மிறைவன் திருத்தா ளடிபணிவாம்
தன்னீர் மையிற்பத் திமைவிசுவா
சத்திற் றழைத்த கன்னிகையாள்
தய்வா யளித்த நசரேசத்
தனிச்சே யதனைப் புரந்திடவே. (4)

இஸ்ப்ரீத்து சாந்துவானவர்

ஆசிரிய விருத்தம்.

உத்தமதி ரித்துவத் தொளிர்கின்ற சோதியா
யுயரரிய சர்வகா ரணசஹித நீதியாய்
இத்தரையி னிற்கன்னி யுதரத்த மர்ந்திடும்
இஸ்ப்ரீத்து சாந்துவெனு மிறைவனைப் போற்று
சித்தமதி ரங்கியெனை மீட்குந்த யாபனைச் [வாம்
சேசுதிரு நாமந்தி ளைக்கும்ப்ர தாபனைச்
சத்துயரு ஞானமுத் தணிகொழிக் குங்கலைத்
தடமுலவு நசரையெங் கடவுளைக் காக்கவே. (5)

அர்ச். தேவமாதா.

சந்த விருத்தம்.

அலையடைந்தசெங் கடனடந்துமா
மூாதபாதபங் கயவரத்தனை
யரியநீதிசத் தியமறைச்சொலு
மன்பருக்குயர் குருதிரத்தனை

மலையடைந்தபேய் தருமயக்கெலா
மடியவோட்டுசுந் தரகருத்தனை
மகிழ்வடைந்தபன் னிருவரோடுமிம்
மாநிலத்துவந் தவருளத்திலின்
னலையடைந்துவா டாதுநாளுமுன்
னதமிகுந்துவாழ்ந் திடகனிந்துநன்
னயமிலங்குசற் போதநல்குமெம்
நசரைமாநகர்க் கதிபனைத்தினங்
கலையடைந்தவெண் பிறைசுமக்கநற்
கதிரவன்றனை யாடையாகவுங்
ககனமேவுமுன் னுன்குடிப்புனை
கன்னியன்பினாற் காக்கவே. (6)

அர்ச். சூசையப்பர்.

வேறு சந்த விருத்தம்.

பூம்பாவ ணிக்கும்பு யத்தாம
ரைக்கும்பு கழ்ச்செய்யவே
பொற்பார்க ழற்போது றப்பாய
மைந்தேபு லந்தந்தவன்
தாம்பாடு வந்தேமனுக்கோல
மேவுந்த யாசீலனும்
தக்கோர னுதிப்பி ரானைத்தி
னங்காத்த ளித்தாளுமால்
தேம்பாவ ணிக்குச்சி றப்பாயெ
ழுந்துச்சி தஞ்செய்மலர்ச்

செங்கோல்க ரத்தேதி னூக்கப்பி
டித்தத்தி ருத்தாதையாம்
மேம்பாடு வந்தாரு மன்னுள்ம
கட்சீர்ம ணந்தந்தநாள்
விற்கொண்ட மாவேந்த ருட்கண்ட
சூசையெம் மெய்க்கொண்டலே. (7)

நவகணத்தோர்.

ஆசிரிய விருத்தம்.

பத்திச்சு வாலகர்க ணித்யஞா னுதிக்கர்
பத்திரா சனர்தம்மொடும்
வித்தகமி குந்தநா தக்கிருத்யர் சத்துவகர்
வியனுலவு பலவர்த்தரும்
தத்துவநி றைந்தபிரா தமிகரதி தூதருந்
தகைதூதர் முதலெவர்களும்
சுத்தபரி சுத்தனைத் தூயநச ரேசனைத்
துதியொடுதி னங்காக்கவே. (8)

சகல அர்ச்சிய சீஷ்டவர்கள்.

சந்த விருத்தம்.

புற்புத மென்னவி ளங்குபு விச்சுமை
போராட் டந்தவிர்வான்
பற்புகழ் கொண்டிடு தற்பர னிரு
பாதம லர்த்தொழுதே

அற்புத மிக்கவி ழைத்தரு ணித்திய
வர்ச்சிய சீஷ்டரெலாம்
விற்பன மேவிய நன்னச ரேசனை
வேண்டிபு ரந்திடவே. (9)

திருச்சபை.

சந்தக் கலி விருத்தம்.

சிந்துமு ழக்கமெனத் தேருரு ளைப்புரவி
வந்துமு ழக்குமெழின் வண்ணச ரைக்கரசை
எந்தவி தத்தினுமோ ரின்பமி குந்ததுதி
தந்துபு ரந்திடுமால் சார்ந்ததி ருச்சபையே. (10)

இரண்டாவது

செங்கீரைப் பருவம்.

அஃதாவது ஒரு காலை முடக்கி, ஒரு காலை நீட்டி, இருகைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்த்தி முகமசைத்தாடும் பருவம் இஃதைந்தா மாதத்து அறையப்படுவது.

செங்கீரைப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

அருவமுரு வமதாகு மண்டபகி ரண்டமு
மசைந்தாட வான லோகத்
தமரர்நவ கோடியுள மகிழ்வெய்தி யார்ப்பரித்
தானந்த மொழிக ளாடப்
பருவமலர் பூத்தசெங் கொடியேந்து சூசையுட்
பரிவுறும கிழ்ச்சி யாடப்
பாவலர்கள் கொண்டாட கோவலர்ம ருண்டாட
பகைபேய்வெ ருண்டாட மேற்
சருவவுயி ருக்குமோர் தாயாய்வி ளங்குமரி
தண்கரத் தேந்தி நித்தஞ்
சர்வாங்க முஞ்செழுந் தேனென்று பாகென்று
தகைமுத்த மாடி யூட்டுந்
திருவமுது வொழுகசிறு குதலைமொழி பேசுபர
செங்கீரை யாடி யருளே
திசையொருப தும்பணிய நசரைநக ரதிபநீர்
செங்கீரை யாடி யருளே. (1)

மருவளரி ளம்பூந்த ளிக்கொடியி னிற்பூத்து
மாறாத பரம கருணை
மதுசிந்து மொருதெய்வ பரிமளப் புட்பமே
மாற்றுகாண் பரிய பொன்னே

உருவளரி ராசரா சர்கள்பணிய வொப்பிலா
தோங்குமெய்ஞ் ஞான தயையே
உயரரிய தெய்விக மனுஷீக தன்மையா
லொண்ணருள்வ குத்த வரசே
தருவளரி டத்தெலாம் வானுலகி னோடுபா
தலமெலாம் போற்று மிறையே
சர்வபரி பூரணச தாகால ரக்ஷகஸ்
தம்பமென நின்ற சுடரே
திருவளர்வி லாசமுக யேசுநச ரேசநீர்
செங்கீரை யாடி யருளே
திசையொருப துமபணிய நசரைநக ரதிபநீர்
செங்கீரை யாடி யருளே. (2)

கவியெலாங் கட்டிவைத் திடுபுலவ ராதியோர்
கண்டுரைசெ யற்க ரியதாய்
கலையெலா நிலைகொண்ட ளப்பமென் மேலுமொண்
கதிர்விடுத் தோங்கு சுடரே
புவியெலாம் போற்றித்து திததருள்வி ழைந்திடப்
பூரணக் கிருபை யாலெம்
புலனெலா மானந்த வமுதருந் திடவுதவு
புனிததயை மேவு பரனே
சவியெலா நிறைநின்றி ருத்தாம ரைக்கழல்ச
தாகால முத்த மிட்டுத்
தயைசாந்த மன்புபத் திமைபூண்டு நீங்காத
தனியருள்பு னைந்த விண்ணோர்

செவியெலா நிறையவூட் டுஞ்சுகுண மொழிசிறுவ
    செங்கீரை யாடி யருளே
திசையொருப துப்பணிய நசரைநக ரதிபநீர்
    செங்கீரை யாடி யருளே. (3)

மூவாத காட்சியு முதற்கடையி லாக்கருணை
    மூவரொன் றான முதலே
முடிவிலா ஞானமெய்ப் பொருளாய்வி ளங்குமொரு
    மூதருட் புனித வடிவே
மேவாத வன்பேய்க ணத்திருள கற்றியொளி
    மேலுந்த ழைத்த சுடரே
மிகுதவமி ழைத்தகன சுராதி யர்க்குதவு
    விமலனே மனுவ தாகிப்
பூவாதி சர்வவுயிர் காத்துரட் சைப்புரிய
    புகழுளமி கக்க ளித்துப்
பூமலர்க் கொடியேந்து சூசையொடு கன்னிமரி
    போற்றமழ லைச்சொற் றிடுந்
தேவாதி தேவனீர் திருமறைவி லாசனீர்
    செங்கீரை யாடி யருளே
திசையொருப துப்பணிய நசரைநக ரதிபநீர்
    செங்கீரை யாடி யருளே. (4)

வான்கொண்ட ளப்பவரி தானசுட ரானநீ
    வல்லமனு வுருவ தாகி
வாழுமுயி ருக்கெலா முயிராய்வி ளங்குநீ
    வாய்மைமசே ருயிர தாகிக்

கான்கொண்ட வாதிதாய் பவமகற் றிடசுத்த
கனிவயிற் றுதய மாசி
கருதரிய மெய்ஞ்ஞான தவநெறியெ லாமுலகில்
காட்டநற் குருமார் களுந்
தான்கொண்ட பக்திவிசு வாசந்த ழைத்தோங்க
தண்ணருள்வ குத்து மேலாந்
தயைகொண்டு தாவீதின் குலமதிலு தித்தவருள்
தற்பரா சர்வேஸ் வரா
தேன்கொண்ட சுவையமிர்த மழலைமொழி யுங்குழவி
செங்கீரை யாடி யருளே
திகசயொருப தும்பணிய நசரைநக ரதிபநீர்
செங்கீரை யாடி யருளே. (5)

விண்படைத் திடுசுரர்க ளெவரெனினு மிகுஞான
விபுதரெனி னுந்த கைமைசேர்
விதிநூலு ணர்ந்தவர்க ளெனினுநன் னெறிமுறை
வியன்றருத வத்த ரெனினும்
மண்படைத் திடுமரச ரெவரெனினு மொழியாத
மாநிதிச் செல்வ ரெனினு
மாருத காயகற் பந்தேடி யுண்டுவாழ்
மகிபரே யெனினு நீங்காத்
தண்படைத் திடுமுலகில் வாழ்புருட மடவார்க
டம்முளே யாவ ரெனினுஞ்
சலராசி புவிராசி யானவுயி ரெவையுமே
தயைநீடு நினது பாதத்

திண்படைத் திடுமருளி னூற்சர்வ சித்திபெற
செங்கீரை யாடி யருளே
திசையொருப தும்பணிய நசரைநக ரதிபநீர்
செங்கீரை யாடி யருளே. (6)

சிறக்குந்த வத்தையுந லத்தையுமி ழுக்திந்த
செகதலமி ழைத்த பொல்லாத்
தீவினைநெ ருப்பிலெழு பாவப்பு கைப்படல
சேர்வைக்க லைத்து வாய்மை
மறக்குங் கொடுங்குணம மைக்குஞ்ச ழக்கலகை
மலிநரக குகை புக்கியம்
மதவெறிகு ணுங்கினின மதிநடுந டுங்கிதிசை
மாறிமா றித்திகி லொடும்
பறக்கும்ப டிச்சிதற டித்துத்து ரத்தியப்
பாதளக் கோட்டை வாயிற்
படிகதவ டைத்துத்தி ரும்பிஜீ வர்களுய்ய
பரலோக ஞான வீட்டைத்
திறக்குங்க ரத்தோடி ருக்குந்தி ருக்குழவி
செங்கீரை யாடி யருளே
திசையொருப தும்பணிய நசரைநக ரதிபநீர்
செங்கீரை யாடி யருளே. (7)

சந்த விருத்தம்.

அருளைய டுத்தவ ருளமலர் மீதி
லமர்ந்தசெ ழுந்தேனே
யவனியி ருட்கெட வுதயமி டுந்தயை
யருள்வடி வத்தோனே

பொருளைய டுத்தவர் முதன்வழி ஞர்க்கொரு
புகழைவி ளைத்தோனே
புனிதத வத்தினர் பரவிட வவரைம்
புலனைவ ளைத்தோனே
மருளையொ ழித்துயர் மதியைவி ளக்கிட
மறையைய ளிப்போனே
மாமரி சூசையு ளங்களி கொண்டிட
மழலைதெ ளிப்போனே
தெருளைவ ழங்கிட வந்ததி னேசுர
செங்கோ செங்கீரை
திகழ்நச ரைப்பதி புகழ்சரு வேஸ்வர
செங்கோ செங்கீரை. (8)

சருவவு யிர்க்கோ ருயிரென வந்தோய்
தண்ணளி நண்ணியசீர்
சகலந லத்தின் சொருபம மைந்தோய்
தகமைம னுக்கோல
வுருவம டைந்தா றுயர்வுசி றந்தோ
புவமையி லாநவமிங்
கொருநூ றுயிர மாயிர மாக
வுவந்துவி ளைப்போய்வின்
மருவுமி ளங்கூர் வளைவுது லங்கும்
மதியைமி தித்துடுவை
மலர்முடி கொண்டே பாநுடை பூண்டோள்
மகிமைத னத்தூறுந்

திருவமு தெனவாய்த் திறந்தமு மதலாய்
செங்கோ செங்கீரை
திசழ்நச ரைப்பதி புகழ்சரு வேஸ்வா
செங்கோ செங்கீரை. (9)

புவிவழி வந்தைம் புலன்வழி தேர்ந்தோர்
புகுவழி கண்டேநற்
புகழ்நிலை முற்றும் தகவில்வி ளக்கும்
புலவர மைத்தசெழுங்
கவிவழி வந்தென் னுளமிசை நின்றோய்
கவலைத விர்த்தழியாக்
கதிவழி காட்டிப் பதிவழி சேர்க்குங்
கருணையு ளத்தோனே
சவிவழி யாந்திரு சபைவழி யேபல
சற்குண வாய்மைமிகுந்
தவவழி யால்வெம் பவவழி நீக்கத்
தகுவழி யடியவர்தஞ்
செவிவழி யொருசீர் மறைநறை பொழிவோய்
செங்கோ செங்கீரை
திகழ்நச ரைப்பதி புகழ்சரு வேஸ்வா
செங்கோ செங்கீரை. (10)

மூன்றாவது
தாலப் பருவம்.

அஃதாவது ஐவகைத்தாயரும் மடித்தலத்தும், மணித்தவிசினும், தொட்டிலினுங் கிடத்தி நாவசைத்துப்பாடும் பகுதியைக் கூறும் பருவம். தால் என்னு மோசையோடு தொட்டிலை யாட்டிப் பாடும் பருவம் எனவுங் கூறுவாரு முளர். தால்=நா. இது எட்டாமாதத்தில் இயம்பப் படுவதாம்.

தாலப் பருவம்.

பன்னிருசீ ராசிரிய விருத்தம்.

வானே யிடங்கொள் திரித்துவனார்
வருணை முகட்டி லசைவாடி
வடிவப் பருதி மதியுடுக்கள்
வயங்கப் பெரும்பே ருலகாக்கிக்
கானப் பறவை விலங்கினநற்
கதிசே ருயிர்பற் பலபடைத்துக்
கருதுந் தெய்வத் தன்மையினைக்
காட்டி யொருமா னிடனோடு
தேனே நிகர்த்த தெரிவையையுஞ்
சிருஷ்டித் தொருகட் டளையவர்தஞ்
சிரமேற் சுமத்த வம்முதல்வர்
தேரா துளமுற் றிடுவினையைத்
தானே தவிர்க்க வருநசரைத்
தலத்துக் கரசே தாலேலோ
தவழ்வெண் மதியை மிதித்தகன்னி
தருஞ்சீர்ப் புதல்வா தாலேலோ. (1)

விதியிற் சிறந்த மாதவத்தோர்
விளங்கு மலரிற் சுரும்பார்க்கும்
விதம்போற் சூழ்ந்து முத்தமிட
மேவுஞ் செழுந்தா மரைக்கழலோய்
நிதியிற் பெரிய மன்னரணி
நிலவ விருதுங் கொடியுடனு

நேர்ந்து வணங்க மணிமுடிக
ணெருங்கிச் சிவந்த நினதுபதத்
துதியும் பொறையுஞ் சாந்தமுநற்
சுகுண வியலும் புவிக்களித்துத்
தொலையா நித்ய பவந்தீர்க்குஞ்
சுகவா ரிதியே யடியோர்செய்
சதியும் பழியுந் தவிர்நசரைத்
தலத்துக் கரசே தாலேலோ
தவழ்வெண் மதியை மிதித்தகன்னி
தருஞ்சீர்ப் புதல்வா தாலேலோ. (2)

வீயா திருந்த மெய்ஞ்ஞான
விளக்கை மதியால் விளக்கி யன்பர்
வினையா மிருள்தீர்த் தானந்த
விருந்து புகட்டி முப்பொழுது
மோயாக் கருணை பொழிகின்ற
வொருவா வன்னாள் சுவக்கினெனு
முயர்ந்தோ ரளித்த மருமலரி
லுவந்தே மணக்குஞ் செங்தேனே
தாயா மோக்ஷ பதிநிலவுஞ்
சுகிர்தா சூசை தினமேத்தித்
துதிக்கும் புனிதா சுரர்மகிபா
சுபஞ்செய் சத்ய திருச்சபைக்குத்
தாயா யன்பு பொழிநசரைத்
தலத்துக் கரசே தாலேலோ
தவழ்வெண் பிறையை மிதித்தகன்னி
தருஞ்சீர்ப் புதல்வா தாலேலோ. (3)

கோலந் தழைத்த படியேசற்
குணமுந் தழைத்துச் சத்யமறைக்
குடியுந் தழைத்து முதிரவன்பேய்
குலத்தை யழிக்குங் குருபரனே
சீலந் தழைத்த குருமார்கள்
சிறப்பா யியற்றும் பலிபூசை
தினமுந் தழைக்க வமர்ந்தருளுந்
தெய்வத் திருப்பா லகச்சுடரே
ஞாலந் தழைத்த வழியேநன்
னலமுந் தழைத்து விசுவாசம்
நாளுந் தழைக்க வன்புதயை
நவிலுங் கிருபை பொறையீகை
சாலத் தழைத்துப் படர்நசரைத்
தலத்துக் சரசே தாலேலோ
தவழ்வெண் பிறையை மிதித்தகன்னி
தருஞ்சீர்ப் புதல்வா தாலேலோ. (4)

மனத்தாற் பக்தி பொறையிரக்க
மாறுத் துணிவு வாய்மைதவம்
மகிழுஞ் சாந்த மன்புநிலை
மன்ன விளங்குஞ் செயலினருங்
கனத்தாற் சிறந்த கல்வியுநற்
கலையுந் தழைத்த விசித்திரநூற்
கருத்தி யடைந்து பலபுகழைக்
காலும் புனைந்த வுளத்தினரும்

இனத்தா லுறைந்த நவமணிக
ளிழைத்த முடிமன் னவருடனே
யெழுந்து மணிப்பூங் குடைகிழற்கீ
ழேய்ந்த பவனி வரவழியாத்
தனத்தாற் சிறந்திங் குயர்நசரைத்
தலத்துக் கரசே தாலேலோ
தவழ்வெண் பிறையை மிதித்தகன்னி
தருஞ்சீர்ப் புதல்வா தாலேலோ. (5)

சந்த விருத்தம்.

இனியரு ளூண்டிட தற்பர னுதிரபி
லின்பமு டன்தூய்மை
யேய்ந்தவ னத்திலி ருந்திட வைத்தவ
ரிருவர்பு சித்தவிடக்
கனியரு ளும்பவ முங்கொடி யேன்புரி
காய்மையு றும்பவமுங்
கண்யம றந்துல கோர்தின முற்றிடு
கடியம னப்பவமாம்
பனியைய கற்றிடு சூரிய னென்ன
படர்ந்துப டர்ந்துலவிப்
பாரிருள் நீக்கிட கன்னியி டத்தினில்
பரிவுட னேமகவாய்த்
தனியரு டந்தத யாபசு ராதிப
தாலோ தாலேலோ
தசநெறி யீந்தரு ணசரைந கர்க்கிறை
தாலோ தாலேலோ. (6)

முத்திர முற்றவ ருட்செறி யுங்கன
மோக்ஷவி டத்தினிலே
முந்தவி ளங்கிடு மற்புத நாயகி
முற்கர மேந்துமொரு
சித்திர மென்னதி கழ்ந்துத வழ்ந்தணி
சேரவி ளங்கியிளந்
தெய்வமு கத்தொடு வந்ததி ஞேகா
திவ்யசொ ரூபமதாய்
பத்திமை கொண்டம லர்க்கொடி சூகை
பரிந்துள மகிழ்வுறவும்
பண்பமர் கன்னிகை யின்புற வும்புவி
பாவமக ற்றுதல்போல்
தத்திந டந்திடு சலசம லர்ப்பத
தாலோ தாலேலோ
தசநெறி யீந்தரு ணசரைந கர்க்கிறை
தாலோ தாலேலோ. (7)

அருணனெ டுந்தல மும்மதி யும்மழி
யாதவு டுக்கணிறை
அந்தர மும்புவி பாதல மும்பணி
யளவில ருட்சுடரே
கருணைவி ளக்கியு மடியர்ம னப்பிணி
களையவெ ழுந்துமலக்
காரிரு ணீக்கிய ஞானம ழிந்திட
கற்பனை தந்துகொடும்

மரணவ வத்தையை மாற்யிடு மற்புத
மன்னவர் மன்னவநீர்
வாழ்கவெ னச்சொலி மூன்றுத போதனர்
வளர்கா ணிக்கையொடுஞ்
சரணம லர்த்தொழு தேத்திடு தற்பர
தாலோ தாலேலோ
தசநெயி யீந்தரு ணசரைந கர்க்கிறை
தாலோ தாலேலோ. (8)

வேறு சந்த விருத்தம்.

வஞ்சனை சூதுபொ ருமையு லோப
வழக்குரை செய்பவ ராகிமனோ
வாதனை யுற்றுவ ருந்துவர் தங்களை
வாய்மையு டன்கன நீதியினால்
அஞ்சல ளித்துதி ருத்திந வம்புரி
யற்புத பொற்புயர் சிற்பரனீ
ரடியர்ம னப்பிணி நீக்கரி தோவென
தாவிநி றைந்திடு மாருயிரே
விஞ்சிய கன்னியி ளங்கொடி தந்தருள்
வித்தக தயைநிறை யுத்தமனே
விண்ணவ ரெண்ணிடு கண்ணென வந்த
விசாலவ ருட்செறி விற்பனனே
தஞ்சமி குந்தத யாபம லர்ப்பத
தாலோ தாலோ தாலேலோ
தசநெயி யீந்தரு ணசரைந கர்க்கிறை
தாலோ தாலோ தாலேலோ (9)

கனகவெ ழிற்சிலு வைத்துவ சேந்திய
கையாய் தாலோ தாலேலோ
கருதும லர்க்கொடி யோன்கர மேவிய
காலாய் தாலோ தாலேலோ
மனநிலை யுந்தகை யும்பொறை சாற்றிடு
வாயாய் தாலோ தாலேலோ
மன்னுவி சாரமொ ழித்தருள் தெய்வத
மார்பா தாலோ தாலேலோ
மினுமுயர் சாந்தமொ டன்புவி ளக்கிய
விழியாய் தாலோ தாலேலோ
மேவிய கருணையின் வடிவென வெய்திய
மெய்யாய் தாலோ தாலேலோ
தனமிகு மன்னவர் கோனென வந்த
தயாபர தாலோ தாலேலோ
தசநெறி யீந்தரு ணசரைந கர்க்கிறை
தாலோ தாலோ தாலேலோ. (10)

35

நான்காவது

சப்பாணிப் பருவம்.

அஃதாவது காலைமடக்கிக் கையுடனே கை கொட்டும் பருவம். இது ஒன்பதா மாதத்திற் கூறப்படுவது.

சப்பாணிப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

நயமாக வேசர்வ வுயிரைப்பு ரந்திட
    நரர்க்குறுசு பாவ பிணியும்
நாடியைம் புலனுலி யற்றுகன் மப்பிணியு
    நாளுக்கு நாள்தணிய வெம்
பயமான பேய்நரக வாதையிடர் நீக்கிடப்
    பாவசங் கீர்த்த னத்தின்
பலனதைவி ளக்கிசஞ் சலமதையொ ழிக்கப்
    பரிந்துசித் தங்க னிந்து
வயமாக வாதிப்பி தாவிடம னுக்கேட்டு
    வந்துதெய் வீக வுரைபோல்
வளர்கன்னி யிளமுன்னி யுளமன்னி யொளிதுன்ன
    வற்றுவ ருட்சாரு நற்
றயவேக ருக்கொண் டுருக்கொண்ட சேய்மதலை
    சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நசரைநக ரெழுமைந்த
    சப்பாணி கொட்டி யருளே. (1)

திணியார்த வத்திற்சி றந்தமரி சூசைக்கு
    செல்வபேர் தந்து பூவில்
திருமறைவ ளந்தந்து பெருமகிழ ளந்தந்து
    திகழ்சருவ முந்தந்து மேற்
கணியாதெ வர்க்குமரி தரிதான தெய்வீக
    காட்சியைத் தந்து ஜீவ
கதிதந்தெ னக்குமோர் துதிதந்து வலபுறக்
    கள்ளனுக் குயர்வு தந்து

பிணியாவை யுந்தவிர்த் தொருபாத லத்தைப்
பிளந்துவெங் கூரலகை தம்
பேரிட் டழைத்தவைகள் வீரிட்டு பின்செலப்
பெரியகட் டளைதருக வே
தணியா வருட்கொண் டுருக்கொண்ட சேய்மதலை
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நசரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (2)

விண்ணூர்த வக்குலம டந்தையர்த மக்கொரு
விசேடரத் தினபீட மாய்
வேதத்தி ருப்பிடம தாய்ஞான சிற்பர
விலாசத்து யர்ந்த சுடராய்
எண்ணாது மெண்ணியுரு கிடுமடிய ருக்கெலா
மின்பந் தருங்குரிசி லாய்
எதிலா கனிவயிற் றுதயமணி யாய்ப்புவிமை
யீடேற்று மோர்கிருபை யாய்
மண்ணூரு யிர்க்குறுதி யாயன்பு மாய்கருணை
மாருமனுக் கோல மாய்
மாசற்ற செம்மயிப் புருவையா யென்னொரு
மனத்திருள கற்று மொளியாய்
தண்ணா ரருட்கொண் டுருக்கொண்ட சேய்மதலை
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நசரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (3)

கோளாற் கெடுத்தவல் லலகைக்கி சைந்துதங்
குடிமுறையி ழந்த பாவக்
கூர்வழிய தாஞ்சென்ம போர்வழியை மாற்றவே
குலவுநற் றீர்க்க ருரையைக்
கேளாத கற்றியுல கின்பத்தில் மூழ்கிவெங்
கேட்டுக்கு ளாகி பொல்லாக்
கிருத்தியம னைத்தும்பு ரிந்திருவி னைக்குட்
கிடந்துழைந் துருகி மாந்தர்
வாளாவி றந்துநர லோகத்த டைந்தங்கு
வன்பேய் கடுஞ்சூளை யில்
வாய்விட்டு கோவென்ன வோலமிட் டுடலெரிய
வாதையுற் றழிய மனமுந்
தாளாதி ரக்கத்து ருக்கொண்ட சேய்மதலை
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நசரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (4)

மண்ணுல மைத்தவிச் சடலச்சு வர்க்குபல
வல்லெலும் புறுகழிக ளை
வரிசைக்கி யன்றவா றமையப்ப ரப்பிட்டு
வரிகரம் பாலி றுக்கி
கண்ணோடு வாய்மூக்கு செவியென்ன மேவுமக்
கதவிலா வாச விட்டு
கட்டியம னைக்குளே வெம்பாவ மாங்கொடிய
கள்ளர்கள் நுழைந்த ழிக்க

எண்ணாத வறிவின்ம யக்கமாந் தூக்கத்
திருக்குமென் னேழை யுயிரவ்
வெரிதீயில் வெந்துநைந் தொருசாம்ப லாகா
தெழுப்பிவே தத்தருவின் கீழ்
தண்ணார்தி ருக்கணிழல் தந்துகாத் திடுபரம
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நகரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (5)

இடையாதி ருக்கின்ற மூவாசை மித்திரர்க
ளிவரேபெ ருஞ்சேனை யா
யியல்பாயு திக்கின்ற காமக்கு ரோதமற்
றிவையே தகும்வல் லபப்
படையாவ மைத்துவெம் பேயரச னுமென்
பாவப்பெ ருஞ்சடல மாம்
பழையமண் கோட்டையுள் ளறிவுமன நினைவென்று
பகர்முப் படைத்த லைவரும்
அடையாத வைம்புலக் கதவின்வழி சென்றுமீண்
டந்தகா ரத்தி னிடையே
யலமந்து நிற்கவுமி வகிலத்தை யேமூடு
மஞ்ஞான மாங்கடிய தோர்
தடையாமி ருட்கெடவு தித்தஞா னப்பரிதி
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நனிதந்த நகரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (6)

சிங்ஙதக்சி யைந்தபத் தியுஞான நெறியுஞ்
சிறந்தவாய் மையுநீதி யுந்
திகழ்தரும முந்தான மும்பிறர்க் குபகாரஞ்
செய்நேர்மை யுஞ்சாந்த மும்
நிந்தையில் லாதொழின டத்துநன் முறைமையுட
னீடுசற் குணசகித மும்
நிலவுமுத் தமர்நேச முஞ்சுகிர் த வழியே
நிலைத்தசிற் சுகவாழ்க்கை யும்
பந்தமறு நன்மைதீ மைகளீது வென்னப்
பகுத்தறிந் தொழுகு முறையும்
பாலிக்க வேமனுக் கோலமுற் றருளொடு
பசுக்குடிலில் வந்து பரம
தந்தைக்கு கந்தவா னந்த ருங்குழவி
சப்பாணி கொட்டி யருளே
தகைமைவள நணிதந்த நசரைநக ரெழுமைந்த
சப்பாணி கொட்டி யருளே. (7)

சந்த விருத்தம்.

பாவப் பறவையி னிடமொரு கருவாய்ப்
பாவத் திரள்கூடிப்
பாவத் துருவா மண்டத் திருவினை
பாவக் கழல்கொண்டு
மேவத் தத்தடி யிட்டுந டந்து
மெலிந்து மெலிந்துலக
வேலிதி ரிந்திரை தேடிய லைந்து
விசாரவ லைக்குள்படுஞ்

சீவப் பறவையி னுயிர்மீட் கத்தகு
ஜீவ னளித்துயர்வாந்
தேவக் கிருபைவி ளக்கிட வம்புவி
செய்சதி தேர்தெய்வக்
கோவப் பழியற வந்தம னேசுர
கொட்டுக சப்பாணி
குலநல மிலகிய வளநச ராதிப
கொட்டுக சப்பாணி. (8)

திடமிக வேயும னத்தைம யக்கி
தியக்கிடு மாமோகம்
செய்மை யுறப்பிறர் வாழ்வில் பொருது
சினந்திடு வெங்கோபம்
அடமுற வேகெடு நினைவொடி ரக்க
மகற்றிடு மாலோபம்
அன்பற நோக்கிய டங்கலு மேகி
மூக்கண் டிடுபாவம்
இடமுற வைத்தர சாட்சிபு ரிந்திடு
மெரிநர கப்பேயின்
இனத்தைவெ ருட்டிம ருட்டிது ரத்தி
யிடர்த்தரு மஞ்ஞானக்
கொடுமைத விர்க்கவு தித்தப ராபர
கொட்டுக சப்பாணி
குலநல மிலகிய வளநச ராதிப
கொட்டுக சப்பாணி. (9)

வீறுபு கழ்க்கிறை மூவர்ப ணிந்திடு
வெல்லைம லைச்சிகையும்
விண்ணவர் தண்ணருள் மேவிடு யோர்தான்
வேதந திப்புனலும்
உன்றுப டாக்கலி லேயபொன் ஞடு
முயர்ந்திடு நன்னசரை
ஒண்ணக ருங்கத் தபவா ரணமு
முவந்தமு கிற்கணெழுஞ்
சீறுவெண் பரியுஞ் சிலுவைக் கொடியுஞ்
செபமா லையும்வானோர்
தெளிதொனி முரசும் முப்புவி யேத்துந்
திரயிகு மாணையுமேற்
கூறுத சாங்கமொ ருப்பட வந்தவ
கொட்டுக சப்பாணி
குலநல மிலகிய வளநச ராதிப
கொட்டுக சப்பாணி. (10)

ஐந்தாவது

முத்தப் பருவம்.

அஃதாவது குழவியி[illegible]வாய் முத்தத்தை அவாவி ஐவகைத் தாயர் கூற்றாகக் கூறும் பருவம். இது பதினோராவது மாதத்திற் கூறப் படுவது.

முத்தப் பருவம்.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்தி வராகங் கட்செவிகார்
தாழைக் கமுகு சலஞ்சலமீன்
தழைக்குங் கன்னற் கராவுடும்பு
சாலி முதலாய்த் தருமுத்தம்
நிந்தைக் கிடமா யொளிகுன்றும்
நிலையே மாறிப் பலவிடத்தும்
நெருங்கித் தகரும் விலைக்கீடாய்
நிற்கு மதனு லவைவேண்டேன்
எந்த விதத்தும் பலனுடைத்தா
யெல்லா நலமுந் தரவலதா
யிணையற் றெனக்கோ ருயிர்த்துணையா
யிகமும் பரமும் விளைமதியாச்
சிந்தைக் குரிய மெஞ்ஞானத்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (1)

துறந்த மனத்தின் பெருவெளியிற்
றுலங்குந் தவமாந் தருவினிடை
சுபசௌ மியச்செம் மலர்பூத்துச்
சுகிர்த மெனுந்தண் கனியேந்தி

பறந்து நவவான் கணங்களெனும்
பறவைச் சூழ வழைத்தவைகட்
பணிய மகிமைக் குணவமுது
படைக்குங் கன்னித் திருத்தாய்க்கு
மறந்துங் குறையொன் றிழையாத
மணியே மழலைத் தெளித்துலக
மாசு தவிர்க்க சத்தியமா
மறையை விளக்க மெய்ஞ்ஞானஞ்
சிறந்து விளங்குஞ் செழும்பவளத்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (2)

நவக்குங் குமத்திற் கழகூட்டு
நறிய செழுந்தா மரைப்போதும்
நாறுங் குமுத மலர்க்காந்தள்
நவின்மா துளையு மசோகமுநற்
றவக்கூ றுறுஞ்சண் பகப்போதுந்
தகைக்கோ வையுஞ்சி ரிலவமுமெய்த்
தண்ணார் பவளத் தொருமலருஞ்
சமமாய்ச் சமைத்த தெனவிருந்திங்
குவக்கும் படியோ வியஞ்செய்த
வுருவிற் றிகழ்ந்து தெய்வமணா
மொருமூன் றுலகும் பரிமளிக்க
வுவந்து குவிந்து நிவந்தழகிற்

சிவக்குங் கருணைப் பெருக்குமலர்த்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (3)

காம்பான் மலர்ந்து கனிந்தவினைக்
கனியைப் புசியா தமைத்ததுவெங்
கடவுட் கபடத் தனமென்று
கருத்தை யழித்தத் தீயலகைப்
பாம்பால் விளைந்த சென்மபவப்
பழியே தொடாா தரியதவப்
பயன்சே ரன்னைச் சுவக்கினருட்
பலனோர் கன்னிப் பெண்ணுருவம்
பூம்பா லெடுத்த தெனவுதித்த
புனிதத் திருத்தாய் மகிழ்வினொடும்
புரைதீர் பக்தி தயையினொடும்
புகட்டுந் தெய்வப் பரிமளச்செந்
தீம்பான் மணக்குஞ் செழும்பவளத்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (4)

பொருந்துந் தெய்வத் தொருசலசப்
போதோ திருத்தா மரைக்கொழுந்தோ
பொன்னு டவரும் மண்ணவரும்
புகழ்ந்து மகிழ்ந்து நாற்றிசையும்

இருந்து விழிக ளுவப்பெய்த
விமையா நாட்டத் திரவுபாக
லென்றுந் தோரா துளத்தவிசி
ருத்துங் கருணைச் சரோருகமோ
வருந்து மடியோர்க் காதரவாம்
வனசத் தரும்போ பிறைக்கொழுந்து
வளைந்த மலர்த்தாட் கன்னிமரி
வயிற்றி னுதயப் பங்கயமோ
திருந்து மழலைத் தெளிகமலத்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (5)

கொழுந்தாம் பிறைசூ டியபதங்கட்
கும்பிட் டேத்த வானவருங்
கொடியேந் தியவொண் முடியரசக்
குலமும் வலமாய்ச் சிரந்தாழ்த்தி
யெழுந்தே பணிந்து பணிந்துதம
திதயங் குளிர நினைத்தவரா
மெல்லா மடைந்து திரும்பதயை
யிசைக்குங் கன்னித் திருமுகத்தி
லெழுந்தா வணைத்து முத்தமளித்
தருட்கண் ணுறுத்தி யுச்சிமுகர்ந்
தகமு முகமுங் களித்தூட்டு
மரிய கருணை யமுதினொடு

செழுந்தா மரையின் சிவப்பொழுகுந்
திருவாய் முத்தந் தருவாயே
தேவே நசரைக் கோவேநின்
றிருவாய் முத்தந் தருவாயே. (6)

சந்த விருத்தம்.

பனியிருக்குஞ் சிறுபிறைக்கும்
பழியடர்க்கண் ணாவினோர்ப்
பகைசிரத்துங் கழலமைக்கும்
பலநலப்பண் புடையினள்
நனியிருக்கும் பொழுதினுக்கும்
நவில்தவத்துப் பெருவிழா
நடையியற்றுஞ் சமயமுற்றும்
நகைமுகத்தம் மழலையாற்
கனியிருக்குஞ் சுவைதெளித்தெண்
கலைவிளக்கும் பவளவாய்க்
கடையினிற்கண் ணமுதொழுகுங்
கடவுள்முத்தந் தருகவே
தனியருட்செஞ் சரணித்தன
றருகமுத்தந் தருகவே
தசகுணத்தண் ணசரயத்தன்
றருகமுத்தந் தருகவே. (7)

படரரிக்கண் ணரிவையர்க்குள்
படுசொல்கர்ப்பக் குமியிலாப்
படிவருத்தஞ் சிமிதுமற்றுப்
பலவகைத்தத் துவமெலாம்
அடர்தகைக்கன் னிகைவயிற்றொண்
ணருள்கருக்கொண் டொளியுரு
தவனியிற்செவ் வுதயமிட்டெம்
மகவிருட்கெட் டழியவோர்
திடகலைப்பைங் கிரணமெய்ச்சத்
தியகதிர்த்தின் ணொளியில்சாத்
திரவிளக்கந் தருவிசித்ரச்
சிறுசொல்கற்கும் மழலைவாய்த்
தடமறைத்தந் தருளுமண்ணற்
றருகமுத்தந் தருகவே
தசகுணத்தண் ணசரையத்தன்
றருகமுத்தந் தருகவே. (8)

நிலமனைத்தும் புகழ்விளைக்கும்
நிலையமைத்தங் குயர்வுநீள்
நெறிவிதித்தெம் பழியறுக்கும்
நிகரில்தஞ்சச் சிறகிளாய்
நலமனைத்தும் பெறநினைக்கும்
நடைநலத்தன் புடையினோர்
நடுவமைக்குங் கலைகள்முற்றும்
நனிசிறக்குந் தவிதனூர்

குலமனைத்துங் குடியனைத்துங்
குலவிநித்தம் புகழ்விழாக்
கொளதவத்தின் கனிவயிற்றிற்
குடிபுகுந்திப் படியில்சஞ்
சலமனைத்துங் களைவிசித்ரன்
றருகமுத்தந் தருகவே
தசகுணத்தண் ணசரையத்தன்
றருகமுத்தந் தருகவே. (9)

வளமிகுந்துத் திரமறைக்கும்
வகைதருஞ்சித் திகளெலாம்
வளர்பெறுஞ்சத் தியசபைக்கும்
வசையறுந்தின் னருளின்கோ
மளமிகுங்கட் கிருபைமுற்றும்
மலியவைத்திங் கழிவிலா
மகிழ்விளைக்கும் படிபுவிக்கண்
மனுவுருக்கொண் டுலகபோர்க்
களமிகும்வஞ் சகமனத்துக்
கடியருக்குங் கொடுமைசூழ்
கயவருக்குங் குணமளிக்குங்
கடவுள்முத்தந் தருகவே
தளமிகுஞ்சுந் தரபதத்தன்
றருகமுத்தந் தருகவே
தசகுணத்தண் ணசரையத்தன்
றருமுத்தந் தருகவே. (10)

ஆறாவது

வருகைப் பருவம்.

அஃதாவது குழந்தையை வருகவென்று ஐவகைத் தாயரும் அழைக்குங் கூற்றாகப்பாடும் பகுதி. இது பன்னிரண்டா மாதத்திற் கூறப்படுவது.

வருகைப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

புன்புலால் தோலொடுந ரம்பெலும் பாதியைப்
புகழொடுவ ளர்க்க வேண்டிப்
புதிதுபுதி தானநெய்ப் பாலொடறு சுவைமிக்க
போசனம ளிப்ப தன்றி
இன்பிலா வுள்ளத்த ழுக்காறு வஞ்சக
மிடும்புபொய்க் களவு காம
விச்சைவெஞ் சூதுப்பொ றாமைலோ பங்கொடுமை
யிவையெலாம் நிறைப டுத்தித்
துன்புலா வியவலகை யிந்த்ரசா லக்கோல
தொல்லையே யானந்த நற்
சுகமென்று நாடுமூல சுமியாமை யைப்போக்க
சுகிர்தவிண் ணவர்ம னத்தின்
அன்புலா வியநினது பதமலரை ளிக்கமனு
வானகுரு பரன் வருகவே
அசரசர துதிபெருக வுசிதவரு ணிதிதருக
நசரையதி பதிவருகவே. (1)

சுழியாத லைக்கும்ப சுந்தேறல் மாந்துஞ்
சுறும்பினங் களியாட் டொடுஞ்
சுகுணரீங் காரவின் னிசைபாடு வெல்லையிற்
சுகிர்தபசு வின்கி டையினிற்

கழியோடு கைக்குவித் திடையர்தொழ புல்லினுற்
 கட்டியத் திருவ ணையின்மேல்
கடியவெம் பாவத்தை யோர்ந்துகண் மூடியுங்
 கருதுமவ் வினையை நீக்க
விழியாறு கொண்டருட் கருணையமு தத்தோடு
 மீளத் திறந்து மிந்த
விதமாக வறிதுயிலு ணர்த்தவிப் பாழுலக
 மீதுமனு வுருவ மெய்தி
அழியாவி ரக்கத் துருக்கொண்ட யேசுவெனு
 மரியகுரு பரன் வருகவே
அசராசர துதிபெருக வுசிதவரு ணிதிதருக
 நசரையதி பதிவருகவே. (2)

விண்டலத் தொடுமண்ட லத்தைத்தி ருத்தியிரு
 வேறற்ற சமனி லைக்குள்
விரிகதிர்ப் பரிதிமதி யுடுகணக் குவையே
 விளங்கவைம் பூத வணுவைக்
கொண்டசையு மசையாத வெழுவகைத் தோற்றமுங்
 குணமுறவ குத்திங் ஙனே
குறையாத பேரருள்வ ரம்புக்கு ளேயுயிர்க்
 குடிவாழ வைத்த வற்றைத்
தெண்டிரையி னிற்புழுதி யிற்கருவி லண்டத்தி
 னிற்செனிப் பித்து முறையே
செவ்வுணவ ளித்துகாத் திட்டழித் திடவல்ல
 தேவக்கு மார வருக

அண்டர்சூழ்ந் தடிபணிந் திடதிரும ரிக்கரு
வமைந்தகுரு பரன் வருகவே
அசராசர துதிபெருக வுசிதவரு ணிதிதருக
நசரையதி பதிவருகவே. (3)

பன்னிருசீ ராசிரிய விருத்தம்.

சகவா சையினைத் துறந்தவெழிற்
சந்யா சியரும் விரத்தர்களுந்
சாருங் கமலத் திருவடியின்
தயையே யருள வருகமனப்
பகைவா தனையே மிகவிழைக்கும்
பாழ்பேய் மயக்கி லெனைத்தடுத்துப்
பதியா மோக்ஷத் தலவாழ்விற்
பங்குண் டாக்க வருகவருட்
சுகவா ரிதியே பெருங்கருணைச்
சுரக்கு முகிலே யடியவர்தந்
துயர்தீர்ந் தழியா நிலையளிக்கச்
சுபஞ்சூழ் வெல்லைச் சிறுகுடியில்
மகவா யுதித்த வெம்முயிர்க்கண்
மணியே வருக வருகவே
மங்காச் சுடர்கொண் டொளிர்நசரை
வாழ்வே வருக வருகவே. (4)

விண்ணுக் கடங்காப் பேரொளியை
விளக்க வருக மெய்த்தவத்தோர்
விருப்ப மனைத்து மீடேற்ற
விரைந்து வருக வானவர்தம்

கண்ணுக் கடங்காத் திருவழகைக்
காட்ட வருக புவிவினையைக்
களைந்து மேலாங் கதியளிக்கக்
கனிந்து வருக முதுப்புலவர்
பண்ணுக் கடங்காப் பெரும்புகழைப்
பதிக்க வருக வெனதுமனப்
பவத்தை யழிக்கக் கிருபையொடும்
பரிந்து வருக திரைக்கடல்சூழ்
மண்ணுக் கடங்காப் பேய்க்கணத்தை
மாய்ப்போய் வருக வருகவே
மங்காச் சுடர்கொண் டொளிர்நசரை
வாழ்வே வருக வருகவே. (5)

கதியே வருக கருணைபொழி
காரே வருக ஞானியர்தங்
கருத்தே வருக கிருபைநிறை
கண்ணே வருக தேவுலக
நிதியே வருக தெய்வவரு
ணிலையே வருக வுயர்நீதி
நெறியே வருக வருளமுத
நிலவே வருக வெனதுமனத்
துதியே வருக வுயிர்க்கினிய
சுகமே வருக மாசறுகத்
துவமே வருக தாவிதன்பா
சுரமே வருக மதியளிக்கும்

மதியே வருக திகழ்வெல்லை
மலையோய் வருக வருகவே
மங்காச் சுடர்கொண் டொளிர்நசரை
வாழ்வே வருக வருகவே. (6)

சந்த விருத்தம்.

பூத மைந்தினைவ குத்து வானினொடு
புவிச ராசரம்வ குத்துமேற்
புந்தி யுற்றமனு வந்த ரத்தரொடு
புனிதர் சித்தனைவ குத்துவெம்
பாத கத்தவர டைந்தி டும்நரக
பாத லத்தையும்வ குத்ததில்
பற்ப லக்குணய தக்கொ டும்வினை
படைத்த பேய்களைவ குத்துநன்
னீத முற்றகரு ணைக்கி யன்றபர
நித்தி யத்தினைவி ளக்குமோர்
நேர்மை யானதைவ குத்து மிவ்வுலக
நித்தி யத்தினையு ணர்த்தவே
வேத தத்துவமு ரைக்க வந்திடுதெய்
வீக மாமகிபன் வருகவே
விந்தை சூழ்நசரை யெந்தை டேமரியின்
மைந்த னேவருக வருகவே. (7)

வேறு சந்த விருத்தம்.

நிறையின் மிகுதியை யுடைய வடியவர்
நினைவி லுறுதிகள் பெருகவும்
நிதமும் வளர்திரு சபையி னுரியவர்
நிலைமை பெறவருள் தருகவும்
கறையின் குணமுடை நரக வுலகினர்
கடிதி லுளமது கருகவும்
கருது பரகதி தழுவ நடுவமர்
கவின ரருகினில் மருகவும்
முறையி னொருவழி யெளிய ருனதிரு
முளரி பதநறை பருகவும்
முனையு மிருவினை யதனை யெணியெணி
முழுது மனமிக வுருகவும்
மறையின் முடிவறு கலையை யருளிய
மகிப னருளொடு வருகவே
மகிமை யிலகிய நசரை நகர்வள
மருவு குருபரன் வருகவே. (8)

வேறு சந்த விருத்தம்.

இளமை திகழு முகமு மதிக
வினிய கருணை விழியுமோர்
எழிலி னிலகி குவியு மிதழ்க
ளியையு மரிய பவளவாய்
நளமை மலரி னுரிய செழுமை
நகமு முவமை கரமுமே
நவதை யமைய படரு மிருமை
நளின புயமு மகலநீள்

அளமை யுலக சருவ வுயிர்க
ளமைவ சிறிய வயிறுநே
ரவதி தணிய வருளை யுதவு
மழகு பதமுந் தொழுதுசீர்
வளமை பெருகு சுராரி னதிபன்
வருக வருக வருகவே
வசன மறையி னசரை யிறைவன்
வருக வருக வருகவே. (9)

வேறு சந்த விருத்தம்.

இறையே வருக வெழிலே வருக
இன்பே வருக வருகவே
ஈசா வருக நேசா வருக
எந்தாய் வருக வருகவே
பொறையே வருக புகழே வருக
புனிதா வருக வருகவே
போதா வருக நாதா வருக
பூமான் வருக வருகவே
நிறையே வருக நெறியே வருக
நிலையே வருக வருகவே
நித்தா வருக சுத்தா வருக
நீதா வருக வருகவே
மறையே வருக மகிழ்வே வருக
மலரே வருக வருகவே
மணியே நசரைக் கணியாய் வருமெம்
வாழ்வே வருக வருகவே. (10)

ஏழாவது

அம்புலிப் பருவம்.

அஃதாவது பாட்டுடைக் குழவியோடு விளையாட வருகவென்று தாயர் சந்திரனை சாம பேத தான தண்டங் கூறி யழைக்கும் பருவமாம் இது பதினெட்டாமாதத்துக் கூறப்படுவது.

அம்புலிப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

(சாமம்.)

உலகெலாஞ் சென்றொளிய ளிப்பைநீ யிவனுமவ்
வுலகெலா மொளிய ளிப்பான்
ஓங்குதண் ணமுதந்தி ளைப்பநிறை வாயிவனு
முயர்வுதண் ணளியி னிறைவான்
கலகமறு சாயையென வெவரேனு மண்ணுந்து
கிாணுவர்நின் மண்ட லத்தை
கனிவினொடு மண்ணுந்து நின்றுதொழு திடவிவன்
கருதுபர மண்ட லத்தான்
திலகநுத லரிவையர்மு கத்தினுக் கொப்பெனத்
திகழுவுன் னைப்ப ரவுவார்
தெரிவையரெ லாந்தமது நயனமலர் போலிவன்
சேவடிம லர்ப்ப ரவுவார்
அலகிலா வின்நிலைமை யாலிவற் கொப்புநீ
யம்புலீ யாட வாவே
ஆசையருள் வீசுமறை பேசுநச ரேசனுட
னம்புலீ யாட வாவே. (1)

(பேதம்.)

ஈகையாற் பதினாறு கலைபடைந் திடுவைபிவ
னெண்ணிலாக் கலையு டையவன்
இசைகன்னி யடிசுமந் திடுவைநீ யக்கன்னி
யேந்துசைக் குழவி யிவனும்

ஓகையுற நீபிறந் தன்றுமுதல் வாரத்து
　　ளொருநாளுன் பேர்பு னைந்தாய்
உரிமைதரு மிவனுதித் ததுமுதலி நாட்கெலா
　　மோங்குமன் பேர்பு னைத்தான்
சோகையா லெழுகின்ற மேகப்பு முக்குற்று
　　துவளுவை நீயி வனுமோ
துகளிலா மேகத்தை வாகனம தாக்கொண்டு
　　தோன்றுவான் விண்ண கத்தே
ஆகையா லுன்னிற்சி றந்தகுரு நாதனுட
　　னம்புலி யாட வாவே
ஆசையருள் வீசுமறை பேசுநச ரேசனுட (2)
　　னம்புலி யாட வாவே.

(தானம்.)

ஒழியாது நாடிநீ சூரியனி டத்திலே
　　யொளிசிறிது வேண்டி நிற்பாய்
யுற்றவர்க் குபகார மீட்டுமிவ னுன்றனக்
　　குயர்ஞான வொளிய ளிப்பான்
பொழியாது பொழிகின்ற வமுதகிர ணங்கொண்டு
　　புவியில்வா சஞ்செய் வைநீ
புகழரிய தெய்வீக கலையமுது கடல்போற்
　　புகட்டுவா னின்ற னக்கே
விழியான தின்றிநீ யேக்குற்றி டாதபடி
　　விஞ்ஞான நயன மீவான்
விறுமலை காடுகளெ லாஞ்சுற்றி யலையாது
　　வேண்டுநன் னிலைய ளிப்பான்

அழியாத கன்னியிவ னன்னையருளும்பெறுவை
யம்புலி யாட வாவே
ஆசையருள் வீசுமறை பேசுநச ரேசனுட
னம்புலி யாட வாவே. (3)

(தண்டம்)

பெருமையிலி வற்குநிக ரின்றெனம கத்துவம்
பேசுவா ருலக மெல்லாம்
பிரபலமி குந்தவிவ னேவலின் படிநின்று
பேய்களுமெ ழுந்தோ டுமே
இருமையுல கத்திலுமி வன்சொற்க டங்காத
வெவரேனு முண்டு கொல்லோ
இருதயப ரப்பிற்பு குந்துமஞ் ஞானத்தை
யீடழித் திடவல் லவன்
பருமையுறு குஷ்டரோ கைத்தொலைத் துயர்மரம்
பட்டுபோ கச்செய் பவன்
பாரெலா மிவனரிய தெய்வீக கருணையால்
பன்னுமுயிர் பெற்று நிற்கும்
அருமைமிகு பொறுமையே குடிகொண்ட வன்வெகுளி
யடையுமுன் னுட வாவே
ஆசையருள் வீசுமறை பேசுநச ரேசனுட
னம்புலி யாட வாவே. (4)

(இதுவுமது)

நிலைதவழு யர்ந்தவிவன் றந்தையுனை யாதிநாள்
நிருமித்த தோர்ந்தி லாய்நீ
நீடுவா னளவிடச் சுழல்கின்ற வுன்றனின்
நிலைமைசற் றேனு முணராய்
கலைதவழு நின்னிலுங் குளிர்முகவி லாசமுடை
காரிகைத னைச்ச மைத்துக்
காவினில மைத்ததைக் கண்டுமன மாழ்கிநீ
காடுமலை யோடி யின்னுந்
தலைதவழ வுடல்குறைந் தேங்குவது மெண்ணிலாய்
சாற்றுமிவ னன்னை பாதஞ்
சரணென வடைந்தநினி மித்தமுனை விட்டனன்
தானலா துனைவி டுவனோ
அலைதவழ்க் கருணைவா ரிதியிவனு மாதலா
லம்புலி யாட வாவே
ஆசையருள் வீசுமறை பேசுநச ரேசனுட
னம்புலி யாட வாவே. (5)

சந்த விருத்தம்.

சிந்தனை செய்திடு மன்பர்த மக்கொரு
தெய்வமெ னத்திகழ்வான்
செப்பரு நித்திய தற்பர னாகிய
சேசுவெ னும்பெயரான்

வந்தனை யோடுவ ளம்பெற வேண்டிடு
வானவர் தந்தலைவன்
வாகைம னத்தவ ரோகையு றத்திகழ்
வாசம றைத்தகையால்
மூந்தவி ளங்குபு விப்பல வற்றினு
மோக்ஷவ ழித்துணைவன்
முப்பொழு துங்கனி யாகிய வித்தகி
மூத்தம ளித்துநிதம்
அந்தமி குங்கர மேந்திய பரனுட
னாடுக வம்புலியே
அன்னிய மில்லா நன்னச ரேசனொ
டாடுக வம்புலியே. (6)

வித்தக மேவிய மெய்ப்புல வோர்மன
வீட்டில்கு டிப்புகுவான்
விச்சுபெ றுங்கொடு துச்சம தாகிய
வீயிருள் போக்கியொளிர்
நித்திய ஞானவி ளக்கினை யேற்றி
நிலைத்தம கத்துவமே
நீடிட நல்லமு தச்சுவை யுண்டு
நிலாவுமு யிர்த்தோழன்
சத்திய வேதமு ரைத்துல கோர்க்குயர்
சன்மார்க் கம்பயில்வான்
சார்ந்திடு துக்கமி வர்த்திய ளித்தருள்
சற்குண வுத்தமனும்

அத்தனு டன்பரி சுத்தனு டன்றின
மாடுக வம்புலியே
அன்னிய மில்லா நன்னச ரேசனொ
டாடுக வம்புலியே. (7)

வஞ்சக மாங்கொடு வாழ்க்கையி னின்று
மருண்டும யங்கிதினம்
வாஞ்சைமி கப்புவி பொன்னொடு பெண்ணெனு
வாதனை மூப்பொருளால்
விஞ்சுது யர்க்கிரியை வாகந டுங்கி
விசாரம னத்தினராய்
வெந்துழ லுங்கன மானிடர் தம்மை
விளித்துந லம்புரியத்
தஞ்சம ளித்துப தேசமொ ழிந்து
சமாதா னத்துடனே
தந்தையு மன்னையு மெய்க்குரு வென்ன
தயாளநி றைந்தவனாய்
அஞ்சல றுத்தருண் மெய்ப்பர னருட
னாடுக வம்புலியே
அன்னிய மில்லா நன்னச ரேசனொ
டாடுக வம்புலியே. (8)

வேறு சந்த விருத்தம்.

பூதல மேற்பல ஞானித போதனர்
புகழ்குரு மார்களொ டுயர்வெய்தும்
புண்ணிய மன்னர்கள் விற்பன ருங்கழல்
போற்றிடு நற்குரு தற்பரனும்

மீதல மார்ந்திடு சம்மன சோர்திகழ்
மிகுமர்ச் சயசிஷ் டத்தலைவர்
மின்னிய தேவக ணங்களெ லாந்தொழ
மேன்மைத ரும்புனி தச்சிரான்
ஓதரு வாதனை சூழ்ந்திட வேக்கம
துற்றுக ணைப்பெறு நோய்கொண்டே
உள்ளநெ கிழ்ந்துரு கிப்பசி தாகமொ
டோய்ந்துவ ருந்திகி டப்பவர்சூழ்
பாதல மும்பணி கின்றத னிச்சுடர்
பாலனொ டாடுக வம்புலியே
பண்புறு வளமலி நசரைத லத்ததி
பதியுட னாடுக வம்புலியே. (9)

சுற்றவ ருங்குல முற்றவ ரும்பணி
கர்த்தனொ டாடுக வம்புலியே
கஞ்சமு கத்தொடு விஞ்சிய தற்பர
கன்யனொ டாடுக வம்புலியே
வற்றலி லாக்கரு ணைக்கியல் பாலனொடு
மகிழ்வுட னாடுக வம்புலியே
வண்மைத ருங்ககலை மேவியெ மூங்கன
வானுட னாடுக வம்புலியே
நற்றவ ரேத்திடு நித்திய னோடருள்
நண்ணிட வாடுக வம்புலியே
நானம லர்க்கொடி சூசைதி னம்புகழ்
நாதனொ டாடுக வம்புலியே

பற்றிய மோக்ஷந கர்க்கிறை யோனொடு
　　பரிவுட னாடுக வம்புலியே
பண்புறு வளமலி நசரைத லத்ததி
　　பதியுட னாடுக வம்புலியே. (10)

எட்டாவது

சிறுபறைப் பருவம்.

அஃதாவது, பாட்டுடைக் குழவியை ஐவகைத் தாயர் சிறுபறை கொட்டும்படி வேண்டும் பருவம். இது இரண்டாமாண்டிற் கூறப்படுவது.

சிறுபறைப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

துய்வளர்சு ராதிபரு நவகணத் தவருமகிழ்
சுகுணவாழ்த் திசைமு ழக்குந்
தோன்றுபர மண்டலத் தசரீரி யாகத்
தொனிக்குநன் னெறிமு ழக்கும்
மெய்வளரு ளத்தினர்க ளுதயபலி பூசையினின்
மேன்மைதரு மணிமு ழக்கும்
விஞ்சையர்த போதனர்க ளடிபணிந் தேத்துமொரு
விகசிதத் துதிமு ழக்கும்
உய்வதிது மார்க்கமென வுற்றுவந் தடைகின்ற
வுயரரசர் முடிமு ழக்கும்
ஓயாது முப்போது மேமுழக் கிடவிந்த
வுலகின்மனு கோல மான
தெய்வதகி றைக்குரிய நசரைநக ரதிபநீர்
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபர
சிறுபறைமு ழக்கி யருளே. (1)

நித்தியபி தாவினோ டிஸ்ப்ரீத்து சாந்துவென
நின்றவர்க் குயர்ந டுவுமாய்
நீங்காத தெய்வத்தி ருக்கருணை பொழிகின்ற
நின்மலப் பரம வொளியே

சத்தியமெ னும்பயிர் தழைத்துச்செ ழித்தோங்கி
தனிகதிர்வி டுத்த வெளியே
தயையருணி லாவவெழு தண்கிரண பாநுவே
சாற்றரிய ஞான சுடரே
உத்தமவ லர்க்கொடிபி டித்தவள ளுஞ்சூசை
யுளமலர்ம ணக்கு மணமே
யுற்றவெம் பவநோய கற்றவன் புருவாகி
யுலகின்மனு வாக வந்தென்
சித்தமக லாதுநிறை வுற்றநச ரேசநீர்
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபர
சிறுபறைமு ழக்கி யருளே. (2)

கனகவொளி தனிலுமிக வுஜ்ஜிதமென் றோங்கிவளர்
கருணைதெய் வீக மறையைக்
ககனசுர ரொடுபுவியி லறிவிலுயிர் தருமகிபர்
கைக்கொளவ ளித்த முதல்வா
மனகதிப ரப்பிமா ருதகித் தியஜீவ
மாநகர்க் கதிப னென்றே
வானவரு மதிதூய வேதபா ரகர்களும்
வாயார வாழ்த்தி நிற்கச்
சுனவினருள் தேவன்பரி சுத்தர்பரி சுத்தர்பரி
சுத்தரென வேமுழக்குந்
தூயகுரு மாரொடுதி ருச்சபையி னோர்களுஞ்
சொற்றுதிமு ழக்க நீடத்

தினகரனெ னப்புவியி லுதயாநச ரைக்கதிப
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபா
சிறுபறைமு ழக்கி யருளே. (3)

தேமாங்க னிச்சிதற செங்கால னம்பரவி
சிறகால ணைப்ப வதனைத்
தீம்பலாக் கனியான்வெ ருட்டுமுழ வர்க்கதபி
செஞ்சாற்றி னளறு தோயப்
பூமாது ளக்கொடிபி டித்தடிபெ யர்க்கப்
பொறுஞ்சீர்வ ளப்பகு தியாற்
பொற்புறவி ளங்குநச ரைப்பதிவ ருஞ்செல்வ
புண்யஞா னத்தே சிகா
தாமாய நாதிச்ச ரீரமில் லாதளவில்
சகலநன் மைச்சொ ருபியாய்
சார்ந்தவ்யா பகமாகி சர்வகா ரணமான
தனையமு விருலட் சணச்
சீமானெ னுந்தெய்வ பூமாசு ரர்க்கதிப
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபா
சிறுபறைமு ழக்கி யருளே. (4)

இடங்கொண்ட மாபிரிய தத்வபரி பூரணத்
தனையயிலகு கன்னி மரிநீ
சந்ததமு வாழ்ந்திடக் கர்த்தரும் முடனுக
தருவனிதை மார்க ளுள்ளே

யிடங்கொண்ட வாசிர்வ திக்கவுற் றவளுநீ
யேய்ந்தவுன் றிருவ யிற்றி
லினிதுற்ற சேசுபரி சுத்தரர்ச் சயசீஷ்ட
இறைவிநீ யமல னனைநீ
கடங்கொண்ட பாவியா கியவெமக் காகவே
கர்த்தர்தமை வேண்டி யாளக்
ககனவுடு வைப்புனைந் திறைவியைய ணிந்துவெண்
கலைமதிமி தித்தா யெனத்
திடங்கொனடு சுரர்கள்தொழு மன்னையருள் நசரேச
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபர
சிறுபறைமு ழக்கி யருளே. (5)

ஆட்சியினி றைந்தசரு வேசனொரு வரையன்றி
யானபிர தெய்வ மதனை
யகமதனி லெண்ணுது கர்த்தர்திரு நாமத்தை
யவலமாய்ப் பேசா துநற்
காட்சியிலு யர்ந்தபர னுரியதிரு நாட்களைக்
கண்யமா யாச ரித்துக்
கருதரிய மாதாபி தாவைசங் கித்துகொலை
காமமோ கங்கொ ளாது
தாட்சியுறு களவுபொய்ச் சாட்சிசொல் லாதுபர
தாரத்தை யிச்சி யாது
தணியாத வாசையாற் பிறருடமை வேண்டாது
தகுபத்து நெறிய ளித்துத்

திட்சைதரு நசரைநகர் மாட்சிபெறு சுராதிப
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபர
சிறுபறைமு ழக்கி யருளே. (6)

மறக்கினும் மறவாது மகிழ்விஞெ டிசழ்வினும்
வருபுண்ய பாவத் தினும்
மாறுத வில்லறத் துன்பவின் பத்தினும்
மன்னுபேய் சோத னைக்குள்
இறக்கினும் பொல்லாத பாவியே னென்றெணு
திருக்கினுந் தேவ கருணை
யெள்ளளவ டைந்துநல் லுயிர்பெற்று நின்சமுக
வெதிர்நிற்க வேண்டி மீளப்
பிறக்கினுஞ் சேசுமரி சூசையென் றேதிடப்
பெருமந் திரந்தந் தவா
பிறழாத ஞானமுங் கல்வியுங் கருணைப்
பிறங்கதவ வாய்மை நெறியிற்
சிறக்கினுந் தாழ்ச்சியே கைக்கொள்நச ரேசநீர்
சிறுபறைமு ழக்கி யருளே
திருமரிய ளித்தசுத பெருமறைவி ளக்குபர
சிறுபறைமு ழக்கி யருளே. (7)

சந்தவிருத்தம்.

பெருமுறை யாற்சரு வேசன மக்கருள்
பிரசா தந்தரவே
பேசரு மானிட ரூகவு தித்துயர்
பேரின் பச்சுவையே
தருமுறை யான்மறை யோதுவ தன்றி
சராசர மும்புவிமேல்
தண்ணுயி ருற்றெழ வேண்டியு மந்தியில்
தன்சுய ரூபமதாய்

இருமுறை யும்வரு வாரென முன்ன
மிருந்தவப் போஸ்தலர்கள்
இசைதரு வாக்கிய மேநிறை வேறிட
வெழில்தவி தரசோங்கத்
திருமறை யான்மனு கோலமெ டுத்தவ
சிறுபறை முழக்குகவே
திகழுறு வளமலி நசரைந கர்க்கிறை
சிறுபறை முழக்குகவே. (8)

வேறு சந்த விருத்தம்.

வாசக்குல மலராகிய வனிதைத்திரு மரியாள்
வாய்மைக்கொருதலையாயுயர் தூய்மைக்கணிநிலையாய்
நேசத்தொடு மகிழ்வாலொளி நீடப்புவி மிசைநன்
னெறியாயருள் புதல்வாவென வுயியாவினை நீக்கப்
பாடேற்றுடன் மனுவாகிய பரனேதனை வரனே
பண்ணோர்துதி யுண்ணுடிய விண்ணோர்தொழு நாதா
மாசற்றிடு நசரைக்கதி பதியேநவ மிகுமா
மறையோதிடு மிறையேசிறு பறையேமுழக்குகவே.

கதியாலுயர் மரியும்புகழ் கனிவாலுயர் வளனும்
கலையேழணி சுரருந்தவ நிலைசூழ்முனி வரரும்
நிதியாலுய ரரசுந்தகை நெறியாலுயர் முரசும்
நீடாழியி னலையோசையு மீடாதும றைக்குந்
துதியாலுயர் பரனேபுவி யதிபாரமு மொன்றாய்த்
தோளேந்திடு நினதற்புத தாளேந்திடு முறையே
மதியாலுயர் நசரைக்கதி பதியேநவ மிகுமா
மறையோதிடு மிறையேசிறு பறையேமுழக்குகவே.

ஒன்பதாவது

சிற்றிற் பருவம்.

அஃதாவது, சிற்றில் இழைக்குஞ் சிறுமியர் தஞ் சிற்றிலைச் சிதைக்க வேண்டா மென்று பாட்டுடைக் குழவியை வேண்டும் பருவம். இது மூன்றாமாண்டிற் கூறப்படுவது.

சிறு × இல்: —சிற்றில். சிறுவர் மணல் வீடுகட்டி பதுமை விவாக நடத்தல் முதலியன.

சிற்றிற் பருவம்.

பன்னிருசீ ராசிரிய விருத்தம்.

இசையிற் பெரிய புலவரெலா
மிறைஞ்சுந் தனியே முன்னாளில்
ஏவை யிழைத்த பவந்தீர்க்க
வெழுந்த தவிது குலவிளக்கே
வசையிற் கொடிய பேய்கள் தரும்
வாதை யனைத்து நீக்கிசுக
வாழ்க்கை யருளு மெய்ஞ்ஞான
வடிவிற் றழைக்த வித்தகனே
நசையற் றவர்கள் தினமேத்து
நாதா வானோர் பணிபாதா
நளின மலர்வா விகள்சூழ்ந்து
நாளும் புகழா னிறையவெட்டுத்
திசையிற் சிறந்த நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (1)

விரும்பிச் சுவைக்கு மதுவூற்று
வியன்செஞ் சாலி வயனிறைப்ப
வேண்டுஞ் சிகைக்கற் றைக்கதிர்கள்
விளங்கும் பவளக் குவியலென

அரும்பி மணிமுத் துதிர்க்கவவை
யணிவா னுடுக்கள் கூட்டஙிக
ரகன்ற வெளியி லொளிவீசு
மதியாச் சரிய நினைக்குங்கால்
இரும்பு மனங்கொண் டவரேனு
மிளகி மகிழ்ச்சித் ததும்பவள
மெல்லாம் பார்த்துப் பார்த்தபடி
யிருப்பா ரன்றி மீண்டுமிங்கு
திரும்பச் சகியா நகரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேகுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (2)

மூவா திருந்த மாங்கனிகள்
மூன்றை யடுப்பா கச்சமைத்து
முதிர்ந்த சங்கிற் றெளிதேனை
முகிழ்த்தே யுலையா கத்தீட்டித்
தூவா மணிக ளனலேற்றிச்
சுகிர்த புவிநித் திலத்தரிசி
சுவைக்கப் பெய்து சுகவமுதா
துவள வடித்துச் சிறூர்விருந்து
ஆவா முன்னஞ் சிறுவீட்டை
யழிப்ப நினைப்ப தழகேயோ
அத்தா வெங்க ளரசேசீ
ரடியேஞ் சிற்றி லழியேலே

தேவா சிறந்த நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (3)

கல்விச் சிறிது முணர்ந்தில்லோங்
கடியுங் குணமும் படைத்தில்லோங்
கருது மெங்கள் மரப்பொம்மைக்
கண்ணீர் விட்டுத் தேம்பாதோ
நல்வித் தகமுந் தின்கடத்தால்
நாட்டு மூலையுங் கவிழாதோ
நவின்பா துளைத்தீ யவியாதோ
நாங்கள் வதுவை வதுவையெனச்
சொல்லிக் கொணர்ந்த சிறுர்க்குமனச்
சோர்வுண் டாகச் செய்வதுநின்
சுகிர்த குணத்துக் கழகாமோ
தூய்மை மறையைப் போதிக்குஞ்
செல்வா வளஞ்சூழ் நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (4)

கரம்போற் றடியர் மனவிருளைக்
கடியும் ஞானக் கதிரோனே
காணும் புவியோ ருயிர்மீட்கக்
கருதி யுயிரைக் கொடுப்போனே

திரம்போற் படைக்க வழிக்கவெல்லாஞ்
செய்ய வுமக்குத் திராமுண்டு
தேவா பகைமை வையாது
சிறந்த தயவா யாங்கேட்கும்
வரம்போற் கொடுக்க வேண்டுகிறோம்
வகையா ரெங்கட் சிறுவீட்டை
வசையா லழித்து விடவேண்டாம்
வாய்மை தவத்தோர் வானவர்க்குச்
சிரம்போல் விளங்கு நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (5)

ஆர்க்கு முவரி மேனடந்து
மாழா வனச மலர்ப்பதங்கள்
அரிய தவத்தோர் பரவநித்ய
வருளைப் பொழியுங் கமலவடி
சேர்க்கு மலர்க்கோ லுடையவெழிற்
றிகழ்மா வளனுந் திருமரியுஞ்
செவ்வாய் மலரான் முத்தமிடச்
சிறக்குங் கஞ்சத் திருக்கழல்கள்
தார்க்கோர் புனித சரோருகக்கால்
சலச விணைப்பங் கயப்பாதந்
தண்டா மரைதாள் மண்ணில்படத்
தருமோ வடியேஞ் செய்தபவந்

தீர்க்குந் தகைசேர் நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (6)

ஆர்ந்த வடியார் மனவீட்டி
லன்பு சாந்தம் பக்தியினை
யடுப்பா யமைத்து ஜன்மவினை
யகல வேதக் கனன்மூட்டிச்
சார்ந்த ஞானச் சுடர்விளக்கு
தனியே விளக்கி யாத்மசுகந்
தரும்பே ரருளா மூலைவார்த்து
சர்வா னந்த வமுதுசெய்து
தேர்ந்த மகிமை சிரம்பூண்ட
திருமா மரியாள் கரத்தேந்துஞ்
செல்வப் புதல்வா சுரர்தலைவா
தீனர்க் கொருதா யகமருள்வோய்
தீர்ந்த நலஞ்சூழ் நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (7)

வருத்துஞ் சிறுவ ரிடர்செய்தால்
வாய்ந்த வவர்தந் தாய்தந்தை
வாழு மனையிற் சென்றிந்த
வறியோர் துயரை வழுத்திடுவோம்

பொருத்த முதியோர் சதிவிளைக்கில்
புவியி லதிகா ரிக்குரைத்துப்
போந்த வொருதண் டனைவிதித்துப்
புகழுங் கீர்த்தி கைக்கொளுவோம்
பெருத்த நீதி யதிபதியே
பிழைசெய் தாலிங் கென்செய்வோம்
பிரியா ஞான மறையோதி
பிறங்கு தவத்தால் யாவரையுந்
திருத்துந் தகைசேர் நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே (5).

பேரார் சத்ய நெறியளிக்கப்
பிறந்த ஞானக் கலைவலனீர்
பிழையா விந்த சிறவீட்டைப்
பேர்த்தே யழிப்பா யெனிலெமது
நேரா ரன்னை மாரிடத்து
நெடிதா யோடி யழுதெங்கள்
நிலையை யுரைத்தோ மாகிலவர்
நிந்தித் தும்மைச் சீறுரோ
தேரா மலுமிப் படிசெய்தேன்
சிறியே னென்றுஞ் செப்புவையோ
தேவர் முதன்மற் றனைவோருஞ்
சிரிப்புக் கிடமாய் மொழியாரோ

சீரா ணிறைந்த நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (9)

சுழிப்புற் றலம்பு நறுந்தேறற்
சுகிர்த வுலையைக் கவிழ்க்காதீர்
துணையாய் நிற்குஞ் சிறுவர்மனந்
துக்கத் தழுந்தச் செய்யாதீர்
பழிப்புற் றிந்த பொம்மைமணப்
பந்தற் குலையப் பண்ணாதீர்
பசிய மணப்பா வைகள்சாய்ந்து
பகலு மிரவுந் தோன்றாமல்
விழிப்புற் றிடநின் றிருக்காலால்
வீழ வுதைத்தீ ராயினவை
விளங்கு முயிர்பெற் றெழுந்தாலெம்
விளையாட் டெல்லாம் வினையாகுஞ்
செழிப்புற் றிலகு நசரைநகர்ச்
சிறுவா சிற்றிற் சிதையேலே
தெய்வக் குருந்தே சேசுபரா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (10)

பத்தாவது

சிறுதேர்ப் பருவம்.

அஃதாவது பாட்டுடைக் குழவியை ஐவகைத் தாயர் சிறுதேருருட்டும்படி வேண்டும் பருவம். இது நான்காமாண்டிற்கூறப்படுவது.

சிறுதேர்ப் பருவம்.

பேராசிரிய விருத்தம்.

நித்யப்பெ ருங்கருணை நீடத்த ருஞ்சுகுண
நிமலிகன் யாஸ்திரி மகிழ்சேர்
நிகரற்ற செல்வமே மகிமைமரு சைப்புனித
னெறிபூங்க ரத்த மருவோய்
பத்திவிசு வாசமொடு பாரிற்ப ணிந்தோர்கள்
பாக்யமே பரம வொளியே
பகாரிய தெய்விக மிகுமுரிய திட்சைவழி
பரிவாய்வி ளக்கு மகிபா
சுத்தனா னதிக்கர் சூழ்ந்துபோற் றக்ககன
சுரர்கள்வாழ்த் திசைமு ழக்கச்
சுகிர்தகா ரணமாகி யகிர்தங்க டிந்துலகில்
தூய்மையை விரும்பு மடியோர்
சித்தத்த மர்ந்திருள கற்றுநச ரேசநீர்
சிறுதேரு ருட்டி யருளே
திரிலோக மட்டுமுன தருளேதி ரட்டனனி
சிறுதேரு ருட்டி யருளே. (1)

வானத்த ளாவுபுகழ் வாகைத்தி ரண்டுவடி
வாகத்த ழைத்த மறைநூல்
வழியோர்ம னத்துயர மூறையேய கற்றதயை
வழியேவி ளக்கு வானீ

தேனொத்த நீதிமொழி தோரத்தெ றித்துலகர்
        தீமைத்த விர்த்து நலமார்
தெய்வத்தி ருச்சமுக மெய்தச்செ யும்புனித
        திவ்யசிங் கார பரணீ
ஞானத்த மர்ந்தசுடர் தேகத்த ணிந்துமஞ்
        ஞானக்க ளங்க மதியை
நற்றுண்மி தித்தகனி பெற்றுளெ னக்ககன
        நவகோடி சுரர்கள் பணியத்
தீனத்த யாளமனு வானநக ரேசநீர்
        சிறுதேரு ருட்டி யருளே
திரிலோக மட்டுமுன தருளேதி ரட்டநனி
        சிறுதேரு ருட்டி யருளே. (2)

மாணிக்க மாமகுட வர்த்தனர்க ளரசுநெறி
        மாறுதி யற்று முறையே
மன்னுவெண் மதிகதிர வன்றேரு ருட்டிடவு
        மதிவேந்தர் மூவ ரொருபால்
காணிக்கை நற்போள தூபவர்க் கத்தினொடு
        கருதுபொற் காசு மிளிரக்
கரதலமி ரண்டுங்கு வித்தடிப ணிந்திடக்
        ககனவுடு சுடரு ருட்டத்
தாணிற்கு மாய்ச்சியர்க ளாயர்துதி கூறிமகிழ்
        தாவிபெரு மன்பு நெகிழத்
தயிர்பா னிறைத்துவந் தானந்த பத்தியொடு
        தமனியக் குடமு ருட்டச்

சேணிற்சி றந்தபுகழ் தோணுநச ரேசநீர்
சிறுதேரு ருட்டி யருளே
திரிலோக மட்டுமுன தருளேதி ரட்டநனி
சிறுதேரு ருட்டி யருளே. (3)

பொய்வைத்த வுள்ளப் பொகுட்டைத்தி ருத்திசற்
போதமெய்ஞ் ஞான முறையால்
பொறையோடி ரக்கமுந் தயைசாந்த மன்பெனும்
புனிதவெரு வேய்ந்து நாளும்
மெய்வைத்த சத்தியவ ளப்பயிர்த ழைத்தோங்க
வேததிரு வேலி யிட்டு
விண்ணின்று மண்மீது தண்ணருட் டுளிவீழ
வியனுழவு செயுமகிப நீர்
கைவைத்த படமெலாங் கால்வைத்த விடமெலாங்
கனசுத்த மென்ப தாலே
கருதுமிவ் வடியோர்க ளின்வருகை நோக்கவே
காணுமுப் போது மெம்முள்
தெய்வத்தி ருக்கருணை பொழியுநச ரேசநீர்
சிறுதேரு ருட்டி யருளே
திரிலோக மட்டுமுன தருளேதி ரட்டநனி
சிறுதேரு ருட்டி யருளே. (4)

காவினிலி ழைத்தவக் கனிபாவ நீக்குவழி
காணுமெய்ஞ் ஞான வழியில்
கருதரிய தீர்க்கர்க ளுரைத்தநன் னீதிவழி
ககனசுரர் போற்று வழியில்

தாவியபு கழ்க்குரிய சயையின்வழி கூசையந்
தவமுனிம கிழ்ந்த வழியில்
சர்வபரி சுத்தமுநி றைந்ததிரு கன்னிமரி
தண்ணருள்வ குத்த வழியில்
மேவியத வத்தினர்து தித்தடிப ணிந்தேத்து
மேன்மைதரு புனித வழியில்
மேலான வாய்மையைம றந்துலக விச்சையால்
மிகுபாவி யேஞ்செய் பொல்லாத்
தீவினைத விர்க்குவழி தெய்வநச ரேசநீர்
சிறுதேரு ருட்டி யருளே
திரிலோக மட்டுமுன தருளேதி ரட்டநனி
சிறுதேரு ருட்டி யருளே. (5)

பொய்ப்பழி யியற்றுமஞ் ஞானத்தி ருக்கொழிய
புதியமெய்ஞ் ஞான மருள்வோய்
பொறையன்பு முறையோடு நிறைதுங்க மிகுதங்கு
புனிதவிற் பனதற் பரா
கைப்பழியு மெங்களிரு கண்பழியு நெஞ்சினுற்
கருதுவஞ் சஞ்சப்ப ழியையுங்
கால்கொடுந டந்துசெய் யும்பழிபு மறிவிலாக்
கசடினு ணித்த நித்தம்
மெய்ப்பல னுறுதுலகி லுவினுற் சொற்பழியு
மேவுபிற வினையை நோக்கி
வீண்வாத மேவிட்டு நீண்மாம யக்கத்து
வீழ்ந்தே வருந்து மடியோர்

செய்ப்பழிய வினைத்தையுமக ற்றுநசரேசநீர்
சிறுதேரு ருட்டி யருளே.
திரிலோக மட்டுமுன தருளோதி ரட்டநணி
சிறுதேரு ருட்டி யருளே. (6)

சந்த விருத்தம்.

ஆசி லாதநவ வான வர்க்குறுதி
யாவ பமைத்தநின தற்புதம்
அகில கோடியுபி ரெண்ணு தற்குமள
வான தோபுவியி லாண்மைதேர்
நேச மூவிருவ ரறுவ ராலரிய
நீதி யாவையுமளித்தநீர்
நீடு மெய்ம்முளநி னைத்த வாறுகுறை
நீக்க வுங்கடின மாகுமோ
வீசு முண்மையைவி ளக்கு மஞ்சிலுவை
விகசி தத்துவச நாட்டியே
வெஞ்சி னக்கொடிய நெஞ்சி னோரெமது
வினைக ளீங்குதயை வழியிலே
தேசு லாவுநச ரேச தூயசிறு
தேரு ருட்டியருள் சேசுவே
சிரி ரட்டவரு ளேறு கட்டிசிறு
தேரு ருட்டியருள் சேசுவே. (7)

எத்தி சைக்குமுயர் வான நல்லரு
ளிசைத்தி டற்குமனு வாகியே
எண்ணி லாதவழி யற்று மாதவ
ரிறைஞ்ச வுங்கொடிய நெஞ்சினோர்

வைத்த பாவவிரு ளைக்க டிந்துலகில்
வாய்மை யாதியவ ழங்கியும்
வாச மிக்கவிசு வாசி கட்கரிய
வண்ம லர்க்கருணை தூற்றியும்
சுத்த மோடுபுல னைந்தி னுக்குமுணர்
தோன்று மாறுசுவி சேஷமாந்
தூய வர்சகமி யம்பி யுந்தயை
சுகோத யந்தருவி னோதவெம்
சித்த மேவுநச ரேச பூபசிறு
தேரு ருட்டியருள் சேசுவே
சிரி ரட்டவரு ளேறு கட்டிசிறு
தேரு ருட்டியருள் சேசுவே. (8)

கோத கற்றுதவி தேந்த்ர னற்றவ
குலக்க டற்கணிடை தோன்றியே
குணமெ லாமரிய தூய்மை யேயென
குயிப்ப நின்றவொரு சங்கென
மாதர் கட்குளுயர் வான நாயகி
வனைந்த கற்பிலுரு வாகியிவ்
வான்வி ளங்குசுடர் தார கைக்குமொளி
வாயு தித்தருளின் வகையெலாம்
ஓத வந்தகுரு நாத வெங்கவலை
யோட வுங்கருணை நீடவும்
உரிமை யானகனி பழிய கற்றிடவு
முலகின் மாக்கள்கடை தேறவுந்

சீத பாதநச ரேச ராசசிறு
தேரு ருட்டியருள் சேசுவே
சீரி ரட்டவரு ளேறு கட்டிசிறு
தேரு ருட்டியருள் சேசுவே. (9)

இசையு றுத்துநவ சுரர்மு தற்பலரு
மேவல் கேட்குமொரு தேவதாய்
எழிலு டுத்தநவ மிணிதெ டுத்தவுரு
வெனவு தித்தமனு வேலநீர்
வசையு றுத்துபவி யுயிர வினத்தினும
வதிவி னைத்தரசி யற்றிடும்
வலிய பேய்க்கணமொ ருங்கொ ழிந்துமது
வாய்மை நீடுமறை வழியிலே
மிசையு றுத்துமெம துளம மைத்தரிய
மேன்மை யான்வயும்வ குத்துவீர்
மிளிர்செய் வானுலக பாக்கி யம்பெறவு
மீகுதி யுந்துதிவி ளைந்தனம்
திசையு றுத்துபுகழ் நசரை பூபசிறு
தேரு ருட்டியருள் சேசுவே
சீரி ரட்டவரு ளேறு கட்டிசிறு
தேரு ருட்டியருள் சேசுவே. (10)

அவையடக்கம்.

கள்ளத்தமி ழென்றேசிலர் கருதற்கிட மில்லா
வள்ளத்தமி ழுரைசத்திய மறையோனைவ ணங்கி
வெள்ளைத்தமிழ் முறையாலவன் விளையாட்டுக ளமையப்
பிள்ளைத்தமிழ் சொன்னேனிதில் பிழையேதடி யற்கே.

இப்புத்தகம்:—விலை அணா 8, சென்னை ஜார்ஜிடவுன் செயின்ட் ஜேவியர் தெரு, 27-வது நெ. வீட்டில் கிடைக்கும்.